நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.849/2025

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அங்கமுத்து |
| தந்தை / கணவர் பெயர் | : | வீரப்பாபிள்ளை |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 30–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.36 AM

1. நான் தற்போது மேட்டுர் பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து நேர கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன நபர் எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார். பெயர் சரியாக நியாபகம் இல்லை. சுமார் 5 மாதங்களுக்கு முன்பு பேருந்து நிலையம் புதிதாக திறந்தன்று வழக்கமான பணிக்காக நான் பேருந்து நிலையம் வந்தபோது அந்தியூர் செல்லும் அரசு

பேருந்தில் மேற்படி நான் சொன்ன எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் நபர் பேருந்தின் முன்சக்கரம் ஏறி அடிப்பட்டு கீழேகிடப்பதை பார்த்தேன்.

2. நான் உடனே எனது இருச்சக்கர வாகனத்தை எடுத்துகொண்டு அடிப்பட்டவரின் வீட்டிற்கு சென்று அவரது மனைவியை அழைத்து வந்து சம்பவயிடத்திற்கு விட்டேன். அதன்பிறகு ஆம்புலன்ஸ் வந்து அடிப்பட்ட நபரை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள்.

3. அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக கோவைக்கு அழைத்து சென்றதாக கேள்விப்பட்டேன். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக சம்பவம் நடந்த அடுத்தநாள் பேருந்து நிலையத்தில் வைத்து விசாரித்தனர். அப்போது நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றுதான் கூறினேன். நான் சென்று பார்த்தபோது விபத்தில் அடிப்பட்ட நபர் பேருந்தின் முன் இடதுப்பக்கமாக அடிப்பட்டு கிடந்தார்.

2. இறந்துபோன நபருக்கு ஏற்கனவே நீரிழிவுநோயால் பாதிக்கப்பட்டு பெருவிரல் அறுவைசிகிச்சை செய்து நீக்கப்பட்டதால் காலை சாய்த்து சாய்த்துதான் நடப்பார் என்றால் சரிதான். அந்த புண் ஆறாமல் பெருவிரலில் கட்டுப்போட்டிருந்தார். அரசு பேருந்தின் அஜாக்கிரதையினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 11.45 AM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**